9th August 1966] [திரு. எம். பக்தவத்சலம்]

ஒரு அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்தேன். சம்பந்தப் பட்ட ஸ்தல அதிகாரிகளை விபரங்கள் கேட்டு, விவரங்கள் வந்திருக் கின்றன. இந்த விவரங்களின்படி பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டி ஏற்பட்டு கட்சி மனப்பான்மை, கட்சி எதிர்ப்பு மனப் பான்மை ஏற்பட்டு இதிலே முக்கியஸ்தர்கள் எல்லாம் ஈடுபட்டு பலாத்காரத்தில் இறங்கி பாலாத்காரத்தைத் தொடர்ந்து பிரயோ கித்துக்கொண்டு வருகிற நிலைதான் அங்கே இருக்கிறது. ஆனால், போலீசார் சும்மா இல்லை, அதிகாரிகள் பார்த்துக்கொண்டிருக்க வில்லை. பலாத்காரம் நடைபெறுகிறது என்பதைப்பற்றி மேலும் உடனடியாக அவர்கள் பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்கள். பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள்; எடுத்துக்கொள்வார்கள். பரிசிலனை செய்யும் இந்த நிலையிலே மேலும் இதைப்பற்றிய விவரங்கள் கூறுவது உசிதமல்ல என்று கருதுகிறேன். மற்றவர்களும் இதிலே தொடர்ந்து கவனம் செலுத்திப் பரிசீலனை செய்து எந்தவிதமான தாட்சண்யமுமில்லா மல் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் கூறிக் கொள்ளுகிறேன்.

V.—PRESENTATION OF REPORTS

(1) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI P. RAMACHANDRAN: Mr. Speaker, Sir, I rise to present the Report of the Committee on Estimates on Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

(2) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

திரு. இராம அரங்கண்ணல்: கனம் தலைவரவர்களே, அரசாங்க உறுதி மொழிகள் பற்றிய குழுவின் ஒன்பதாவது அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

III.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move—

'That under rule 21(3) of the Madras Legislative Assembly Rules, item V in the Agenda for the day be taken up before item IV.'

The motion was put and carried.

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS ADDITIONAL ASSESSMENT AND ADDITIONAL WATER-CESS (AMENDMENT) BILL, 1966 (L.A. BILL NO. 11 OF 1966).

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras Additional Assessment and Additional Water-Cess (Amendment Bill *, 1966 (L.A. Bill No. 11 of 1966) be taken into consideration.'

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 2nd August 1966